# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## வருடத்தின் கடைசியில், லாப - நஷ்ட ஜீவிய கணக்கு?

நம் இருதயமே, நித்தியத்தின் பொக்கிஷங்கள் சேர்க்கும் பண்டக சாலை! ஒரு ஐசுவரியவான், தன் இருதயமாகிய ஆத்துமாவில் "நித்தியத்திற் குரியவைகளை" சேர்க்காமல், அதற்கு வெளியே உள்ள தன் களஞ்சியத்தை "இன்னும் பெரிதாக்கி சேர்த்து வைப்பேன்!" என மண்ணுக்குரிய இலட்சிய முழக்கமிட்டான்! (லூக்கா.12:16-19). அவனைப் பார்த்தே இயேசு "மதிகேடனே!" (ஒன்றும் சேர்க்கவில்லை) என அழைத்து கடிந்து கொண்டார். ஒரு வருடத்தின் முடிவில், தன் இருதயத்திலுள்ள நித்திய பொக்கிஷங்கள் எவ்வளவு? என ஆராய்ந்து அறிவதல்லவோ, ஞானமுள்ள வாழ்க்கை!

மரணத்திற்குப் பிறகு 'ஒரு ஆத்தும வாழ்க்கை' உண்டென்றும், அந்த ஆத்துமாவில் சேர்க்கும் ஐசுவரியமே மெய்யான பொக்கிஷமென்றும் அறிந்தவர்கள் மாத்திரமே.... அது இல்லாத அனைத்தையும் 'மாயை யென்றும்' நஷ்டமென்றும் கணக்குப் பார்த்து, மனந்திரும்பி ஓர் புதிய ஆண்டிற்குத் தங்களை விழிப்புடன் ஆயத்தம் செய்வார்கள்! (லூக்கா.12:20,21). -tr

பெட்டகம் 19 டிசம்பர் 2017 பரல்கள் 12



## ‘நாணமடையாத வீடு’ உருவாக்கும் வாலவயது குமாரர்கள்!

பலவான் கையிலுள்ள அம்புகள்! என சில வாலிபர்களுக்கு வேதம் பெயர் சூட்டுகிறது! (சங்.127:5). இவ்வித வாலிப பிள்ளைகளைக் கொண்ட **ஒரு தகப்பன் பாக்கியவான்** என்றே அடுத்த வசனத்தில் வாசிக்கிறோம் (வச.6). அதற்குரிய காரணம் என்னவென்றால் ‘இவ்வித வாலிப பிள்ளைகளினிமித்தமே’ ‘நல்ல கௌரவமான வாழ்க்கை’ வீட்டிற்கு உண்டாகும்..... அல்லது ‘நாணமடையும் வாழ்க்கை’ வீட்டிற்கு உண்டாகும் என 6 - ம் வசனத்தின் கடைசி பகுதி கூறுகிறது.

வாலிப நாட்களில் தோன்றும் கொடிய பாலிய இச்சைகள், அது தொடர்பான பாலிய இணையதள அல்லது மொபைல் தீமையான தொடர்புகள் அல்லது தன் நெஞ்சின் வழியில் நடக்கும் சுய - இலட்சியங்கள், பண ஆசைகள்..... இன்றைய வாலிபரின் ஆவிக்குரிய பெலனையும், சரீர பெலனையும் குன்றச் செய்கிறது. ஆம், சத்துருவாகிய சாத்தானை முறியடிக்கும் ‘பலவான் கையிலுள்ள அம்புகளாய்’ அவர்கள் இல்லை!

ஆனால், சில வாலிப பிள்ளைகள் எப்படி பலவான் கையிலுள்ள அம்புகளாய் மாறினார்கள்? ஓர் கட்டிடத்தை அல்ல (HOUSE), கர்த்தரை மையமாய் கொண்ட குடும்பமாகிய வீட்டை கட்டுவதற்கும் (HOME)..... எருசலேம் நகரத்தைப்போல் தன் வீட்டை பரிசுத்தத்தில் காப்பதற்கும்..... தங்களின் பிரயாசம் அனைத்தும் ‘விருதா!’ என கைவிரித்து, கர்த்தரை சார்ந்து கொண்ட ஆவிக்குரிய பெற்றோர்களே தேவனுக்குப் பிரியமானவர்களும், அவரது இளைப்பாறுதலில் பிரவேசித்த வர்களுமாய் இருக்கிறார்கள்! அவர்களின் விசுவாசமான இளைப்பாறுதலில் “கர்த்தர் கிரியை செய்தார்!” ஆம், **அவரால் கிடைத்த பலனே**.... பிள்ளைகள் கர்த்தரின் சுதந்திரமாய் மனந்திரும்பி, சத்துருவை வீட்டின் வாசலிலேயே ஜெயித்து, தங்களின் வீட்டை “நாணமடையாத வீடாய்” ஜொலித்திட செய்தார்கள்! (வச.6).

*-Ed*

### முக்கிய அறிவிப்பு

2018 ‘பரலோக பொக்கிஷங்கள்’ வருட சந்தா ரூ.140/– தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்க்கண்ட வங்கி கணக்கிற்கு டிசம்பர் 20–ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். (அரசின் GST வரி காரணத்தால் அதிக விலை கூடியதற்கு வருந்துகிறோம்). ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.120/– அயல்நாடு ஒரு பிரதி ரூ.800/– அனுப்ப வேண்டும். புதுப்பித்துக்கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் ‘புதிது’ என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

ஆவிக்குரிய விழிப்பூட்டும் ! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306, (H) 0452 - 2661177
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, cfcindia.com/tamil

## பாவியை இரட்சிக்க வந்த இயேசு இரட்சகன்!

இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றை மத்தேயு:1 - ம் அதிகாரம் எடுத்துக்கூறுகிறது. யூதர்கள் தங்கள் வம்சாவழியில் புருஷர்களின் பெயரை மாத்திரமே குறிப்பிட்டார்கள். ஆகிலும் இந்த அதிகாரத்தில் நான்கு ஸ்திரீகளும் குறிக்கப்பட்டுள்ளார்கள்! யூத சமுதாயமும், புறஜாதியர் சமுதாயமும் ஸ்திரீகளுக்கு அளித்திருந்த தாழ்ந்த நிலையை, இயேசு இந்த பூமிக்கு வந்து உயர்த்தினார்! என்ற உண்மையை இந்த வம்ச வரலாறு நமக்குப் போதிக்கிறது.

மேலும், இந்த 4 பெண்களும் ஓர் பாவ வாழ்க்கையின் பின்னணியிலிருந்து வந்தவர்கள்! இதுவும், கேடான பாவிகளை இரட்சிக்கவே இயேசு வந்தார் என்ற உண்மையை நமக்குப் போதிக்கிறது.

**முதலாவது** குறிக்கப்பட்ட பெண்ணின் பெயர் **தாமார்** (மத்.1:3). இந்த தாமார், யூதாவின் மருமகள் ஆவாள். இவள் மூலமாய் யூதா, பாரேஸ் என்ற மகனைப் பெற்றான். இந்த பாரேஸ் வம்சம் இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு முன்னோர்களாய் இருந்தார்கள். இந்த வம்சம் உருவாகிய சமயத்தில், இயேசு பரலோகத்தில் இருந்தார் (ஆதியாகமம்.38:12 - 29). பாவ வழியில் வாழ்ந்து வந்த இந்த குடும்பங்களே, பூமியிலே தனது குடும்பத்தின் தலைமுறையாய் இருக்க இயேசு தீர்மானித்தார். இவ்வாறு, பாவ வழி வந்த ஒரு குடும்பத்தை தெரிந்து கொண்டு அந்த குடும்பத்தை, தனது ஜனன உறவாக, தன் வாழ்க்கை சரித்திரத்தின் முதல் பக்கத்தில் அந்த உறவுகளை எழுதி வைத்திட யார் விரும்புவார்கள்? ஆம், எந்த ஒரு மானிடனும் விரும்ப மாட்டான்! ஆகிலும் "பாவியை நேசிக்கவே இப்பூமிக்கு வந்தேன்" என்பதை நிரூபிக்க, பிதாவானவர், தன் குமாரன் இயேசுவுக்கு இக்குடும்பங்களை 'வம்சவாளியாய்' மாற்றினார்.

**இரண்டாவதாக** குறிக்கப்பட்ட பெண்ணின் பெயர் **ராகாப்** (மத்.1:5). இவளும் எல்லோராலும் பிரஸ்தாபமடைந்த வேசிப்பெண்! இவள் எரிகோ மாகாணத்தின் 'சிவப்பு விளக்கு' பகுதியில் வாழ்ந்த பாவியாகிய ஸ்திரீ (யோசுவா.2:1). ஒரு யூத புருஷன் சல்மோன் இந்த புறஜாதிப் பெண்ணை திருமணம் செய்தான். இவ்வாறு, ஒரு யூதன் ஒரு புறஜாதி வேசிப் பெண்ணை திருமணம் செய்ததை இயேசு

*பரலோகத்திலிருந்து கண்டார்! அந்த வம்ச வழியிலேயே தானும் பிறப்பதற்கு இயேசு தீர்மானித்தார்!*

**மூன்றாவது** *குறிக்கப்பட்ட பெண்ணின் பெயர்* **ரூத்** *(மத்.1:5). ரூத் ஒரு மோவாபிய பெண்மணி! அவளுடைய முன்னோராய் இருந்தவர் 'மோவாப்'. இவர், லோத்து தன் மகளிடம் புரிந்த 'விபசாரத்தில்' பிறந்தவர் (ஆதியாகமம்.19:30-37). மீண்டுமாய், இந்த கேடான சம்பவங்களை பரலோகத்திலிருந்து இயேசு கண்டார். இந்த சந்ததியில் இருந்து வந்தவளே* **ரூத்.** *கேடான சம்பவம் நடந்து, கறைபட்ட நிலையில், அந்த சந்ததியில் பிறந்த 'ரூத்' கர்த்தரின் குடும்பத்தை சினேகித்தபடியால், இயேசு அவளின் சந்ததியில் பிறந்திட முடிவு செய்தார்!*

**நான்காவதாக** *குறிக்கப்பட்ட பெண்ணின் பெயர்* **பெத்ஷீபா,** *உரியாவின் மனைவி (மத்தேயு.1:6) இந்தப் பெண்ணிடமே தாவீது விபச்சாரம் செய்து, பின்பு அவளை மணந்து கொண்டான். மீண்டுமாய், இந்தப் பெண்ணின் சரித்திரமும் பாவக்கறை உடையதாய் இருந்தது. முதல் மூன்று ஸ்திரீகளும், மரியாளுக்கு வம்சாவழி முன்னோராய் இருந்தார்கள். ஆனால் இந்தப் பெண்ணோ யோசேப்பின் முன்னோர்களில் ஒருவளாய் இருந்தாள். (இதன் தெளிவை, இந்த வம்ச வரலாறோடு லூக்கா.3 - ல் விவரிக்கப்பட்ட மரியாளின் வம்ச வரலாறோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அறியமுடியும்). இந்த பூமியில் இயேசுவின் தந்தையாக கூறப்பட்ட யோசேப்பு, தாவீதின் இராஜபரம்பரையில் வந்தவர்! இந்த வம்ச வரலாற்றைக் கொண்டு, உரிமை பூர்வமாக, இயேசுவே இஸ்ரவேலின் மெய்யான இராஜா! என்பதை மத்தேயு தன் சுவிசேஷ புத்தகத்தில் நிரூபித்துள்ளார்!*

இவ்வாறு, பாவம் நிறைந்த சந்ததியை இயேசு ஏன் தெரிந்து கொண்டார்? தன்னைப் பாவ மாந்தர்களோடு ஒருவராக காணப்பட்டு, நீதிமானை அல்ல..... பாவிகளை மனந்திரும்பச் செய்யவே இயேசு வந்தார் என்ற அவரது ஆச்சரியமான அன்பை இந்த உலகத்திற்கு காட்டுவதற்கே ஆகும்!

*மேலும், இயேசுவின் வம்ச வரலாற்றிலிருந்து நாம் அறிந்திட வேண்டிய செய்தி என்னவெனில், நம்மில் ஒருவரும் தங்கள்* **குடும்ப வம்சத்தைக் குறித்து வெட்கமடையத் தேவையில்லை!** *என்பதுதான். நம் இந்திய தேசத்திலுள்ள யாதொரு கிறிஸ்தவனும், தங்கள் குடும்ப பரம்பரையை வைத்து மேன்மைபாராட்டினால், அவர்களிடம் கிறிஸ்துவின் சிந்தை இல்லை எனலாம்! "பாவியை இரட்சிக்க வந்த இயேசு இரட்சகன்" என்ற நம் இரட்சகரின் மேன்மையே, நமது இரட்சிப்பிற்கும், நமது குடும்பத்தாரின் இரட்சிப்பிற்கும் வழி வகுக்கும்!*

*– சகரியா பூணன்*

## நித்திய பயணத்திற்கு வழி நடத்தும் உத்தமசபை

**த**ன் பயணத்தின் முடிவாக, ஒரு அரண்மனைக்கு கிறிஸ்தியான் வந்து சேர்ந்தான். அவனை வரவேற்ற வாசல் காவலாளி, அங்கே அன்று இரவு தங்கிச் செல்லும்படி கூறினான். அந்த அரண்மனை வீடானது **'ஞானம்' என்ற மிக கவனமுள்ள சகோதரியினால்** பராமரிக்கப்பட்டு வந்தது. கிறிஸ்தியான் மேற்கொண்ட பயணத்தில் வரும் அனைவருக்குமே ஒரு பெயர் இருந்தது. அது அவர்களின் குணாதிசயத்தின்படி கெட்ட குணத்தின் பெயராகவோ! அல்லது நற்குணத்தின் பெயராகவோ! இருந்தது. ஜீவனுள்ள தேவனுடைய சபையை ஆண்டு நடத்தும் மிக முக்கியமான பங்காய் ஞானம் விளங்குகிறது. இந்த கிறிஸ்தியானை, அந்த அரண்மனை வீட்டிலிருந்த மூன்று சகோதரிகளுக்கு, சகோதரி ஞானம் அறிமுகப்படுத்தி வைத்தாள். முதல் சகோதரியின் பெயர், **தேவ பக்தி.** இரண்டாவது சகோதரியின் பெயர், **விழிப்புள்ளவள்.** மூன்றாவது சகோதரியின் பெயர், **திவ்ய அன்பு!** இந்த மூன்று குணாதிசயங்களும் தேவனுடைய சபைக்கு மிகுந்த அவசியமாயிருக்கிறது. அதில் பிரதானமான முக்கியத்துவம் ஞானமே ஆகும். தேவ பக்தியான யாவரும் இந்த உலகத்தோடு சிறிதேனும் கலந்துவிடாதபடி கவனமாயிருப்பதும், தேவனிடத்தில் அன்புகூர்ந்து பிறரிடத்தில் அன்புகூர்வதுமே அந்த மூன்று முக்கிய குணாதிசயங்கள்!

இந்த அரண்மனையைப் போன்றதாகவே சபையும் இருக்கிறது. மேற்கண்ட குணாதிசயங்கள் சபையில் இருந்தால் மாத்திரமே, நாம் கிறிஸ்துவுக்குள் முன்னேறி வளர்ந்திட முடியும்.

ஞானம், கிறிஸ்தியானைப் பார்த்து "பரலோக இராஜ்ஜிய பிரபு, இந்த அரண்மனையை ஏற்படுத்தி, இங்கு வருபவர்களை உற்சாகப்படுத்தும்படி கட்டளையிட்டுள்ளார்" எனக்கூறினார். ஆம், அதுவே மெய்யான **சபையாகிய அரண்மனை!** உலகத்தின் பல பாகங்களிலும் இந்த அரண்மனை வீடு ஸ்தாபிக்கப்பட்டு, அங்கு வருபவர்களை 'இடுக்கமான ஜீவ பாதை வழியாய்' தொடர்ந்து பயணம் செய்ய உற்சாகப்படுத்தும் அவரது சபை!

கிறிஸ்தியான், பயணத்தில் களைப்பாய் இருந்தபடியால், அவன் இளைப்பாறும்படி ஒரு விருந்தினர் அறையை திறந்து கொடுத்தார்கள். அந்த அறையின் பெயர் **'சமாதானம்'** என்பதாகும். நாம் அனைவருமே இரவு நேரத்தில் இளைப்பாறுகிறோம். நம் இளைப்பாறுதல்

*சமாதானமாயிருக்க வேண்டும். எபேசியர்.4:26 கூறுகிறபடி "சூரிய அஸ்தமனம் ஆவதற்கு முன்பாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது!" எனக்கூறும் புத்திமதியைக் காண்கிறோம். பகல் நேரத்தில் ஏராளமான பாடுகளைக் கடந்து நாம் சென்றிருக்கக் கூடும். அவ்வேளையில், நிதானமிழந்து கோபப்பட்டிருக்கலாம்.... அதை உடனே மன்னிக்கும் படி ஆண்டவரிடம் ஒப்புரவாக வேண்டும்! இவ்வாறாக, நீங்கள் படுக்கைக்குச் செல்லுகின்ற நேரத்தில் உங்கள் இருதயத்தில்* **'பூரண சமாதானம்'** *இருந்திட வேண்டும். 'அலைகழிக்கும் மனதோடு' நாம் ஒரு போதும் படுக்கைக்குச் செல்லக்கூடாது! யாரோ ஒரு சிலரைக் குறித்தோ அல்லது ஒரு சூழ்நிலையைக் குறித்தோ நமக்குள் சமாதானம் இழந்து இருக்கவே கூடாது! உங்கள் கவலையெல்லாம் ஆண்டவர் மீது வைத்து விட்டு, எந்த பிரச்சனையானாலும் அவரிடம் தெரிவித்து விட்டு ..... பின்பு அவரிடம், நீங்கள் மறவாமல்* **'நன்றி'** *கூறின பிறகு, தேவ சமாதானம் உங்கள் இருதயத்தை காத்துக் கொள்ளும்! நீங்கள் உங்கள் பிரச்சனையை மாத்திரம் கூறிவிட்டு, நன்றி கூற தவறி விட்டால்.... பிலிப்பியர்.4:6,7 வசனங்களில் கூறப்பட்ட தேவ சமாதானம் உங்களை ஆண்டு கொள்ளாது. இன்று அனேகர், தங்கள் பிரச்சனைகளை ஆண்டவரிடம் கூறுகிறார்கள். ஆனால் அவருக்கு நன்றி சொல்வதில்லை.* **நன்றி உள்ளத்தோடு நித்திரை செய்கிறவர்கள்,** *விடியும் நேரம் வரை, மிகுந்த சமாதானத்துடன் நித்திரைச் செய்து எழுவார்கள்.*

தங்கள் நித்திரைக்கு இவர்கள் பயன்படுத்தும் 'தலையணை' என்ன தெரியுமா? "ஓர் சுத்த மனசாட்சி!" நீங்கள் படுக்கும் ஒவ்வொரு இரவும் இந்த தலையணையை மாத்திரமே உபயோகித்து நித்திரை செய்யுங்கள்!

*ஞான சகோதரி, அடுத்த நாளில் கிறிஸ்தியானை ஒரு ஆயுத சாலைக்கு அழைத்துச் சென்றாள்.* **அங்குள்ள ஆயுதங்கள், பிசாசிடம் யுத்தம் செய்யும்படி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள்!** *அரைக்கச்சை, பாதரட்சை, தலைச்சீரா, கேடயம் மற்றும் கருக்குள்ள பட்டயம் ஆகியவைகளால் நிறைந்திருந்தது. அங்கு வைக்கப்பட்டிருந்த அனைத்து சர்வ ஆயுத வர்க்கங்களும், ஒவ்வொரு உண்மை கிறிஸ்தவனுக்கும் தேவையா யிருந்தது. இதைக் குறித்த விளக்கத்தை எபேசியர்.6:11-18 ம் வசனம் வரை வாசிக்கிறோம். சத்தியம் என்னும் அரைக்கச்சை, சுவிசேஷத்தை அறிவிக்க சென்றிட 'ஒருபோதும் பிய்ந்து போகாத' பாதரட்சை, விசுவாசம் என்னும் கேடகம், நீதி என்னும் மார்க்கவசம், இரட்சண்யம் என்னும் தலைச்சீரா,..... ஆகிய இவையாவும் சாத்தானுக்கு விரோதமாய் யுத்தம் செய்வதற்கு மிக அவசியம் ஆகும்!!*

*பின்பு அந்த அரண்மனையின் மேல் மாடிக்கு அழைத்துச் சென்று, தூரத்தில் தோன்றிய அழகு நிறைந்த மலைகளைக் காட்டினாள்! பசுமையான திராட்சை தோட்டங்களையும் காட்டினாள்! நறுமணம் நிறைந்த மலர் தோட்டங்களையும் காட்டினாள்! இவைகளைக் காட்டியபின்பு "**இதுவே இம்மானுவேலின் தேசம்**" என மகிழ்ந்து கூறினாள். மேலும் கிறிஸ்தியானைப் பார்த்து "நீ பரலோக இராஜ்ஜிய நகரத்திற்குள் போவதற்கு முன்பாக, இந்த அழகுள்ள இம்மானுவேல் நகரத்தையும் கடந்துச் செல்வாய்! இந்த அழகு நகரம் உன் உள்ளத்திற்கு விசுவாசத்தையும் தைரியத்தையும் தருவதாக!" எனக் கூறி முடித்தாள்!*

*– மோட்ச பயணம் (சகரியா பூணன் விளக்க உரை)*

---

## பார சிலுவை அல்ல, என் சுயம் நொறுங்குவதற்கு ஏற்ற சிலுவை!

*"**ஓ**, என் தேவனே! என்னை எப்படி வேண்டுமானாலும் தண்டியும்..... ஆனால் 'என் சிலுவை' என்னை விட்டு மறைந்து விடாதபடி தயை புரியும்!" என்றே என் உள்ளம் தேவனை நோக்கி கதறியது. 'சிலுவையின் மேன்மை' அறிந்தவளாய் நான் இவ்வாறு கதறிய போதும்.... என் கதறலைக் கேட்டு, என்னை மீண்டுமாய் நெருங்கி வந்த சிலுவையோ 'அதிக பாரமாய்' இருந்ததையும், அது என் உள்ளத்திற்கு கிலேசத்தையும் தந்ததைக் கண்டேன். இவ்வாறு* **நான் விரும்பிய சிலுவையிலும், எதிரும் புதிருமான முரண்பாடு** *இருந்ததைப் பார்த்தேன். 1) சிலுவைக்குப் பின்னால் இருக்கும் தேவனுடைய ஐக்கியமும், மகிமையும் நான் அதிகமாய் விரும்பினேன். 2) சிலுவை கொண்டு வந்த சூழ்நிலையைத் தாங்கிக் கொள்வதற்கோ 'அதிக கஷ்டமாய் இருப்பது போல்' கலங்கினேன்!*

*தம் ஜனத்தின் ஆவிக்குரிய நிலையை துல்லியமாய் அறிந்திருக்கும் தேவன், ஒருவனுக்கு 'பாரமான சிலுவையை' தருவதோ? அல்லது இல்லையோ? என்பதை..... தமக்குரியவர்களின் திராணியைக் கொண்டே நிர்ணயம் செய்கிறார் (1கொரி.10:12,13). எனவே, சிலுவை வழங்கும் சூழ்நிலை எனக்கு அதிக கஷ்டமாய் இருக்குமோ? என்ற கலக்கத்தை தேவனுக்கு முன்பாக வைத்துப் பார்த்தேன். இதுபோன்ற கலக்கம் "**சுய – அன்பே**" என்பதை தேவ சமூகத்தில் உணர்ந்து கொண்டேன்! ஆகவே, என் சுய - அன்பை தழுவிக்கொண்டு, தேவன் எனக்கு வழங்கிடும் கடினமான சூழ்நிலையை அல்லது பாரமான சிலுவையை ஒதுக்கி வைத்து விட்டால் "என் சுய ஆத்துமா மரணத்திற்கு ஊற்றப்படும்" பொன்னான சந்தர்ப்பத்தை நான் இழந்து போவேன் என்பதையும் தெளிவாய் அறிந்து கொண்டேன். என்னோடு*

வாழ்ந்த சுய - அன்பு மிக தந்திரமும் மகா அபாயமும் கொண்டது என்பதை நான் அறிந்திருக்கிறேன். சுய - அன்பு என்னில் முற்றிலும் சாகாமலிருந்தால், அது வேகமாய் தனக்குரிய விருப்பத்தை பூர்த்தி செய்ய நாடும் என்பதையும் என் கண்ணாரக் கண்டிருக்கிறேன். இவ்வாறு, சுயம் என்னிலிருந்து தப்பித்துக்கொள்ள நான் விரும்பவில்லை. என் **ஆண்டவர் வழங்கும் தீவிரமான சிலுவையின் பாடுகள்,** என்னைப் பொருத்தவரையில் எனக்கு அதிகமாய் தேவைப்பட்டது! நான் அவ்வளவு பெருமை கொண்டவள்! என்னுடைய காரியம் என்ன?..... என்ற ஒன்றையே மனதில் கொண்டு வாழ்பவள்! பிறரை விட, என்னுடைய சிந்தையே மேலானது என எண்ணுபவள்! இவ்வாறாக, எனக்குள்ளிருந்த கடினம் எவ்வளவு என்பதை ஆண்டவர் எனக்கு காண்பித்து, நானும் அதை அறிந்திருக்கிறேன்!

"ஒ என் தேவனே! உமது கரத்தின் வல்ல சம்மட்டி, என்னை வலிமையாய் அடித்து நொறுக்கிட தயங்காதிருப்பதாக! உமது வல்ல செயல் அவ்வாறு எனக்குள் சம்பவிக்காவிட்டால் 'உம்முடைய சித்தத்திற்குள்' நான் ஒருபோதும் வனையப்பட முடியாது! உம்முடைய பணிக்கு மகிழ்ச்சியான ஆயுதமாய் மாறவும் என்னால் முடியாது! ஏனெனில், எனக்குள் ஏராளமான மாயை தேங்கி இருப்பதை நான் பார்க்கிறேன்" என்றே மனம் உடைந்து ஜெபித்தேன்!

இவ்வாறு, எனக்குள்ளிருந்த சுயத்தின் அருவருப்பை நான் எவ்வளவு கண்டேனோ, அந்த அளவுக்கு, என் தேவனுக்கும் அவர் எனக்கு ஈவாய் வழங்கும் சிலுவைக்கும் நான் அதிகமாய் கடன்பட்டவளாய் நின்றேன். **இன்றுள்ள திரளான கிறிஸ்தவ விசுவாசிகள், அவர் வழங்கும் சிலுவையின் ஆசீர்வாதத்திற்கு தூரமாய் நிற்பதைக் கண்டு நான் மனம் வருந்துகிறேன்.**

ஒ என் தேவனே, உமக்குப் பிரியமான பிள்ளைகள் மாத்திரமே தகப்பனின் அன்பை உணர்ந்து, உமது கிருபைக்கு கீழாய் ஓடி வந்து, நீர் வகுத்த உமது சிலுவையின் பாதைக்கு நன்றியோடு கடன்பட்டு வாழ்வார்கள்! நானோ இப்போது, "அந்த கடன்பட்ட உள்ளத்தோடு, உம்மை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். ஆகவே, என் தேவனே! நீர் அனுப்பும் சிலுவை யாதொன்றையும் **'பாரமானது' என என்னும் என்னுடைய மதியீனத்திற்கு** முற்றிலுமாய் முற்றுப்புள்ளி வைக்கிறேன்!" இப்போதும் எப்போதும், துன்ப நேரத்தில் உம்முடைய மார்பில் சாய்ந்திருக்கும் **உமது ஆறுதல் ஒன்றே** எனது பாக்கியம்! எனது பேரின்பம்!!

– மேடம் குயான்

## பரிசுத்த கரங்களை உயர்த்தி ஜெபிப்பது, பக்தர்களின் சம்பத்து!

**அ**மெரிக்க தேசத்தில், பொதுக்கூட்டம் ஏதும் நடக்காத கோடை மாதத்தில், வடக்கு கலிபோர்னியாவின் ஒரு பகுதியான கஸாடிரோ (Cazadero) என்ற நகரத்தின் வழியாக **விக்கிள்ஸ்வொர்த்** சென்று கொண்டிருந்தார். இந்த மாதங்களில், ஸ்பெஷல் கேம்ப் கூட்டங்கள் மாத்திரமே நடைபெறும்! ஒரு பொது ஸ்தலத்தில், விக்கிள்ஸ்வொர்த்தை சந்தித்த கூட்ட ஒழுங்கு அமைப்பாளர், அவருடைய வேத வாக்கிய ஆழத்தைக் கண்டு, முகாமின் இரவு நேரத்தில் சிறிது நேரம் பேசும்படி அழைப்பு விடுத்தார். அந்த கூட்டத்திற்குச் சென்ற விக்கிள்ஸ்வொர்த், அவருடைய தொழிலான பிளம்பர் தோரணையில் சாதாரண மனிதனாய் சென்று, மேடையின் ஓரத்தில் அமர்ந்தார். அழைக்கப்பட்ட பிரசங்கியார்கள் பிரசங்கித்து முடித்தவுடன், கூட்ட ஒழுங்கு அமைப்பாளர் விக்கிள்ஸ்வொர்த்திடம் "உங்களால் பேச முடியுமா?....." எனக் கேட்டார். 'ஓ தாராளமாய் நான் பேச முடியும்' எனக் கூறி, அவரைக் குறித்து யாதொரு முன்னுரையோ அல்லது வரவேற்போ ஒரு வரி கூட கூறாத நிலையில் 'மைக்' முன்பாக நின்றார். தன் மேல் கோட்டை கழற்றி வைத்துவிட்டு பேசத் தொடங்கிய **விக்கிள்ஸ்வொர்த்தின் மீது பரிசுத்தாவியின் வல்லமை அபரிதமாய் இறங்கியது.** இரவு கூட்டத்தின் முடிவாய் இருந்தபடியால் சலசலப்புடன் காணப்பட்ட மக்கள் கூட்டத்தில், விக்கிள்ஸ்வொர்த் பேசத் தொடங்கிய உடன் ஓர் பெரிய அமைதி உண்டானது.

அவர் பேசிய முக்கிய செய்தி "**விசுவாசமே**" ஆகும்! விக்கிள்ஸ்வொர்த்தின் அபிஷேகிக்கப்பட்ட வார்த்தைகள் மக்களை தட்டி எழுப்பி, மாபெரும் விசுவாச எழுப்புதலை ஏற்படுத்தியது. கூட்ட முடிவில், கூட்டத்து ஒருங்கிணைப்பாளர் "உங்கள் செய்தி **விசுவாசத்தின் ஆழமான விழிப்பை** எங்களுக்குள் ஏற்படுத்திவிட்டது. எனவே இன்னும் 3 வாரம் நடக்க போகும் இந்த முகாமில் காலையும் மாலையும் நீங்கள் தொடர்ந்து பேச நாங்கள் எல்லோரும் ஆர்வமாயிருக்கிறோம்" என வேண்டிக்கொண்டார். அந்த மாதம், விக்கிள்ஸ்வொர்த்திற்கு பொது கூட்டங்கள் ஏதும் இல்லாதபடியால் அந்த அழைப்பை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார்!

அந்தக் கூட்டங்களில், தங்கள் இரு கரங்களையும் உயர்த்தி தேவனிடம் அபயமிட்டு ஜெபிக்கும் ஜெபத்தை விக்கிள்ஸ்வொர்த் வலியுறுத்தினார். விசுவாசத்தைக் குறித்து, அவர் பேசிய செய்தியின் முடிவில் "ஜெபத்தில் விசுவாசம் கொண்ட யாவரும் தங்களின் ஒரு

கரத்தை உயர்த்துங்கள்'' என அழைப்பு விடுத்தார். பின்பு, ''தேவனை நோக்கி சத்தமாய் ஜெபித்திட விசுவாசம் கொண்டவர்கள் தங்கள் இரண்டு கரங்களையும் உயர்த்தும்படி'' அழைப்பு விடுத்தார். பின்பு இரண்டு கரங்களை உயர்த்திய யாவரும் கண்களை மூடி, உங்கள் ஜீவிய மாற்றத்திற்குரிய முக்கியமான விருப்பத்தை தேவனிடம் சத்தமிட்டு ஜெபியுங்கள்! உங்களின் விசுவாச ஜெபத்தை கர்த்தர் உடனடியாக அங்கீகரிப்பார் எனக் கூறினார். கூட்டத்தில் பெரிய ஆர்ப்பரிப்பு ஜெபம் உண்டானது மாத்திரமல்லாமல், அனைவருடைய இருதயத்திலும் விசுவாச பனித்துளிகள் உள்ளத்தை நிறைத்தது.

கூட்ட முடிவில், சிலர் எழுந்து ''நீங்கள் சொல்லும்படி ஜெபிப்பது வேத பூர்வமாய் இல்லையே?'' எனக் கேட்டனர். அதற்கு விக்கிள்ஸ்வொர்த், வேத பூர்வமில்லாமல் நான் எதையும் செய்வதில்லை! எனக் கூறினார். வேதத்தின் முதல் புத்தகமாகிய ஆதியாகமத்தில் இது உள்ளது! .....ஆபிரகாம் இதைச் செய்தார்! வேத புத்தகத்தின் கடைசி புத்தகத்தில் உள்ளது. ......ஒரு தூதன் இதைச் செய்தான். வேதாகமத்தின் மையப் பகுதியாகிய மோசே, ஆரோன், தாவீது, எசேக்கியேல்...... ஆகிய யாவரும் இவ்வித ஜெபம் செய்தனர். 'கரங்களை உயர்த்தி அபயமிட்ட ஜெபமே' போர்முனையின் ஜெயத்தை அவர்களுக்கு நிர்ணயித்தது! 1தீமோத்தேயு.2:8 - ம் வசனத்தில் ''அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமும் இல்லாமல் **பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம்** பண்ண வேண்டுமென்று விரும்புகிறேன்! அவ்வாறே ஸ்திரீகளும்.....'' என பவுல், இப்படி ஜெபிக்க வேண்டும் என்ற விருப்பத்தை தெரிவித்தார்..... என மிகுந்த சவாலுடன் விக்கிள்ஸ்வொர்த் பேசினார்.

தேவனுக்கு முன்பாக யாதொரு கோபமும் யாதொரு தர்க்கமும் இல்லாமல், பரிசுத்த கரங்களை உயர்த்தி ஜெபிப்பது என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உரிய பரலோக சம்பத்து! என அடுத்த கூட்டத்தில் விக்கிள்ஸ்வொர்த் பேசினார்.

கடைசியாக, கூட்டத்தின் முடிவில் தேவனிடத்தில் கிட்டிச்சேர விரும்புகிறவர்கள் யார்? அவர்கள் எழுந்திருங்கள் எனக் கூறினார். முகாமில் கூடியிருந்த அனைவரும் உற்சாகத்துடன் எழுந்திருந்தார்கள். கோபமும் யாதொருவர் மீதும் தர்க்கமும் இல்லாமல் தேவனுக்கு முன்பாக தங்கள் **பரிசுத்த கரங்களை உயர்த்தி அபயமிட விசுவாசம் கொண்டவர்கள் யார்?** என அழைத்தவுடன்.... தங்களை நிதானித்து, கொஞ்சம் கொஞ்சமாய் எழுந்து, பின்பு அனைவரும் எழுந்து நின்று உற்சாகமுடன் தங்கள் கரங்களை மிகுந்த பக்தியோடு வான் நோக்கி உயர்த்தினார்கள். ''முதலாவது உங்கள் ஆத்துமாவின் சுகத்திற்காக,

தேவனை நோக்கிப் பார்த்து ஜெபியுங்கள். பின்பு உங்கள் சரீர தேவையான சுகத்திற்காக ஜெபியுங்கள்" என அழைப்பு விடுத்த உடன் **விசுவாச வலிமையான ஜெபம்** அந்த இராத்திரியில் ஏறெடுக்கப்பட்டது. இறுதியாக "முழு விசுவாசத்துடன், உங்கள் ஜெபத்தை கர்த்தர் கேட்டார் என உணர்ந்து கர்த்தருக்கு நன்றி கூறுங்கள்" என கூறியதும், அந்த முகாமின் முழு மண்டலமும் தேவனை துதிக்கும் நன்றி ஸ்தோத்திரத்தால் நிறைந்து வழிந்தது!

கடைசியாக ஜனங்களிடம் சில வார்த்தைகள் பேசிய விக்கிள்ஸ்வொர்த் **ஜெபத்தையும் விசுவாசத்தையும் பரிசுத்த ஜீவியத்திற்கு ஆதாரமாய் வலியுறுத்தினார்.** ஒரு நீண்ட ஜெபம் என்பதைவிட அரை மணிநேர ஜெபம் வலிமையாய் இருக்க வேண்டும் என்பதே என் தனி ஜெப கோட்பாடு என்றார். ஜனங்கள் ஆச்சரியமுடன் அதை கேட்டபோது "சற்று பொறுங்கள்.... நான் இன்னமும் சொல்லி முடிக்கவில்லை. என் நடைமுறை வேலைகளில் ½ மணி நேரத்தை தாண்டிய பின்பு, நான் மீண்டும் ஜெபிக்காமல் இருப்பதில்லை! இதுவே என் ஆவியில் இடைவிடாது ஜெபித்திட நான் பெற்ற நியமனம்" என முகாமின் இறுதியில் "விசுவாசத்தையும்..... ஜெபத்தையும், அதற்கு ஆதாரமாய் விளங்கும் பரிசுத்த ஜீவியத்தையும்" ஜனங்கள் மனதில் 'முத்திரை பதித்து' பேசி முழக்க மிட்டு முடித்தார்!!

– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

---

## 'விசுவாச புருஷர்கள்' சாத்தானுக்கு அபாயம்!

**தே**வனுடைய ஆசீர்வாதமான வாக்குதத்தங்கள் அனைத்தும், நமக்குச் சொந்தமாய் மாறிட முடியாத அவலம் ஏன்? வாக்குதத்தத்தை விரும்பும் நம் கண்களுக்கு முன்பாக 'அருவருப்பான நம் சுயம்' நிலைகுத்தி நிற்பதே காரணமாகும்!

தன்மீது சிங்காசனம் அமைத்து ஆண்டு வந்த சுயத்தை பவுல் அறிந்திருந்தார்.... அதே வேளையில், அந்த சுயத்தின் ஆளுகை 'ஒரு சிலுவையினால்' கவிழ்க்கப்பட்டது என்பதையும் பவுல் அறிந்திருந்தார் (கலா.2:20).

இப்போதோ பவுலின் ஜீவியத்தில் கிறிஸ்து சிம்மாசனத்திற் குரியவராய் அமர்த்தப் பட்டுள்ளார். கிறிஸ்துவின் ஆளுகை நம்மீது எப்போதும் சீரும் சிறப்புமாய் இருக்க வேண்டுமென்றால், சுயம் தன் பிடியில் பிடித்து வைத்திருக்கும் தனக்கானதைத் தேடுதல், தனது மகிமை, தனது ஆர்வம், தனது பட்சதாபம், தனது நீதி, தனது முக்கியத்துவம், தன்னை மேம்படுத்துதல், தனது சுய திருப்தி.... இந்த பட்டியலில் இன்னும் எதுவெல்லாம் 'தனது' என்ற சுயம்

*இருக்கிறதோ, அவை அனைத்தும்* **சிலுவையில் அறையப்பட வேண்டும்.... அந்த சுயம் சாக வேண்டும்.** *நீங்கள் யார்? அல்லது, அந்த மனிதன் யார்? என்பது நமக்கு முக்கியமல்ல! உங்களுக்கு எவ்வளவு தெரியும்? அல்லது அந்த மனிதனுக்கு எவ்வளவு தெரியும்? என்பதும் ஒருக்காலும் முக்கியமல்ல! ஆனால்.... அளவில்லா ஞானம் நிறைந்த* **சர்வ வல்ல தேவனுக்கு முன்பாக அவன் யார்? என்பதே முக்கியம் ஆகும். நீங்கள் தேவனை பிரியப்படுத்த தவறிவிட்டு, வேறு யாரைப் பிரியப்படுத்தினாலும் அதில் பிரயோஜனமில்லை!** *நீங்கள் தேவனை மாத்திரமே பிரியப்படுத்துவதற்காக, நீங்கள் யாரையெல்லாம் பிரியப்படுத்தவில்லை! என்பதும் ஒரு பொருட்டல்ல. இப்போது நீங்கள் கிறிஸ்துவோடு ஐக்கியமாய் இருக்கிறீர்களா?.... இதைத் தவிர, நீங்கள் யாராய் இருக்கிறீர்கள் என்பதெல்லாம், நித்தியத்தின் மகிமை அல்லவே, அல்ல! நான் யாரென்ற நிலையை தேவனுக்கு முன்பாக அறிந்து, என்னைப் பற்றிய அருவருப்பில் அதிருப்தி கொண்டே ஜீவித்து முன்னேறுகிறேன்! நீங்கள் முற்றிலும் தேறிய திருப்தி அடைந்து விட்டீர்களா? அப்படியானால், இந்த ஈனப் பாவியான எனக்காக ஜெபியுங்கள் என்றே உங்களை வேண்டிக் கொள்கிறேன்.*

> காரண யுக்திகளைப் பயன்படுத்தி, நடைமுறைக்கு அப்பியாசப்படுத்தும் விசுவாசத்தையே இன்று அநேகர் வைத்திருக்கிறார்கள்! எனக்கு அதில் அக்கறை இல்லை! நான் வைத்திருக்கும் விசுவாசம், முற்றிலும் ஆவிக்குரிய விசுவாசமாக இருப்பதையே நாடுகிறேன்!

*நான் வேத வசனத்தை அற்புதமாய் பிரசங்கித்து விட்டால், அதில் என்ன மேன்மை? ஒருவனை* **ஜீவியத்திற்கு உந்தித் தள்ளும் விசுவாசம்** *இல்லையென்றால், அந்த பிரசங்கத்தால் என்ன பிரயோஜனம்? வெறும் எழுத்து கொல்லும் அன்றோ! மரித்த நிலையிலிருக்கும் மானிடருக்கு, இன்னும் மரணத்தைக் கொண்டு வந்து சேர்ப்பது சரிதானா? தான் வாழும் கிறிஸ்தவ சந்ததிக்கு, கர்த்தரின் அபரிதமான வல்லமையை வெளிப்படுத்தி காண்பிப்பவனே, கிறிஸ்துவைப் போன்ற "நன்மை செய்கிறவனாய்" இருந்திட முடியும்! வேதம் உரைக்கும் வாக்குதத்தமாகிய "தேவனை அறிந்த ஒரு பலவான் இருந்தால், அவன் எதிராளியின் வல்லமையை உரிந்து, அவனைக் கொள்ளையிடுவான்!" என இயேசு உரைத்த வாக்குதத்தம் நிச்சயமாய் நிறைவேறிவிடும். நமக்குள், தேவனை அறிந்த ஒரு விசுவாச சகோதரன் இருந்தால்.... "லூசிபராகிய சாத்தானே, உனக்கு அபாயம் வந்துவிட்டது!" என்ற வெற்றி குரல் விண்ணைப் பிளக்கும்!*

*– லியோனார்டு ரேவன்ஹில்*

## 'அவரது காரியமாய்' நிற்போர் குடும்பம், அவரால் கட்டப்படும்!

"பரமானந்தம் ஐயருக்கு ஐந்து பிள்ளைகள்! ஐந்து பிள்ளைகள் இருந்தும் எவ்வித சத்தமோ, சச்சரவோ, மூர்க்கமோ, பிடிவாதமோ, கீழ்ப்படியாமையோ அவர்களிடம் நாங்கள் கண்டதில்லை!" என சபையார் பேசிக்கொள்வார்கள். பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோருக்கு அதிக பொறுப்பும், சிரமமும் உண்டென்பது நிச்சயம். **ஏலி** ஆசாரியனாயிருந்தும், தன் மக்கள் இருவரையும் நல்ல வழியில் நடத்த முடியாதவனாய் நின்றான்! அவர்கள் இருவருமே பாவ வழி சென்று மடிந்தார்கள்.

ஒரு தாய் குணக்கேடு கொண்டவளாய் இருந்தும், தேவ பக்தி நிறைந்த தகப்பன் தன் பிள்ளைகளை, தேவ கிருபையை முன்வைத்து தன் மக்களை சிறந்த பிள்ளைகளாய் வளர்க்க முடியும்!

உலக ஞானம், குடும்பம் கட்டப்படுவதற்கு அற்ப பிரயோஜனமே ஆகும். சில பெற்றோர், இடி முழங்குவதுபோல தங்கள் பிள்ளைகளிடம் வெகு கண்டிப்பாய் நடந்து கொள்கிறார்கள். பிள்ளைகளை எப்போதும் அதட்டுவதும், அடிப்பதும், முழங்காலில் நிற்க வைப்பதும், மிளகை அரைத்து கண்ணில் தடவுவதும், உப்பில்லா சோறு போடுவதும், பிரம்பை எடுத்து விலாசுவதும்.... ஆகிய தண்டனைகளால் பிள்ளைகளை நல்லவர்களாக்கிவிட பார்க்கிறார்கள். துஷ்ட பிள்ளைகளை சிட்சிக்க கூடாதென்று வேதம் சொல்லுவ தில்லை. ஆனால், **அந்த சிட்சையிலும் ஞானம் வேண்டும்!** என்றே வேதம் போதிக்கிறது. "அப்பா வருவதைக் கண்டால், என் பிள்ளைகள் பயந்து ஓடி ஒளிந்து கொள்வார்கள்" என்று பெருமை பேசும் தாய்மார்களும் உண்டு!

'தகப்பன்' என்பது மக்களுக்கு அவ்வளவு வெறுப்பாய் இருந்தால், 'தேவன் உங்களுக்கு தகப்பன்' என்னும் போதனையையும் உங்கள் பிள்ளைகள் வெறுப்பார்கள். தேவனும் தகப்பனா? போதும் போதும், இனியும் ஒரு தகப்பன் வேண்டாம்! என அன்பின் தேவனை மறுப்பார்கள்.

அன்பில்லாமல் பிள்ளைகளைக் கண்டித்து நடத்துவது, அவர்கள் மனதை கடினப்படுத்தும்! பெற்றோர் மீது வெறுப்பை உண்டாக்கும்! யாதொரு நன்மையும் பயக்காது. வாழ்க்கை என்பது ஒரு எதிரொலிக்கு சமானம். அன்பான பேச்சு அன்பான பேச்சையும்! ஆங்காரமான பேச்சு ஆங்காரமான பேச்சையும்! அப்படியே பிரதியாய், எதிரொலிக்கும்! பிள்ளைகளை மூர்க்கமாய் நடத்துவது, அவர்களின்

மனதை கடினப்படுத்துவது போலவே.... **இளக்காரம் கொடுத்து நடத்துவதும்,** அவர்கள் கெட்டுப் போவதற்கு நடத்துவதேயாகும்! பிள்ளைகளுக்கு ஒழுங்கை கற்றுக்கொடுப்பது பெற்றோர்களின் மிகப் பெரிய கடமை. ஆகிலும் அதை **அன்பின் வழியில்** கையாள வேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது.

'தேவ பக்தியே' குடும்பத்தின் பிரதானமாய் இருந்தால், உங்கள் பிள்ளைகளும் அருமையாய் வளருவார்கள். இருப்பினும் அவபக்தியுள்ள குடும்பத்தில், பக்தியுள்ள பிள்ளைகள் இருக்க முடியாது என நாம் ஒருபோதும் சொல்லிவிடக்கூடாது. ஒரு சீஷனாய், தன் குருவாகிய ஆண்டவரை நோக்கிப் பார்க்க பழகிய பிள்ளைகள், அவபக்தியான தன் பெற்றோர்களின் வழியில் சென்றுவிட மாட்டார்கள்!

எப்படி இருந்தாலும், கர்த்தர் வீட்டை கட்டாராகில் கட்டுகிறவனின் பிரயாசம் விருதா என்பதை நாம் அறியக்கடவோம். ஆம், சகலமும் தேவனுடைய கரத்தில் இருக்கிறது. நான் அறிந்ததெல்லாம் "....இதோ, கர்த்தருக்கு பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்!" (சங்.128:3,4) என்ற சூத்திரமே ஆகும்!

என் பிள்ளைகளுடைய கல்வி, வேலை, திருமணம் ஆகிய எல்லா விஷயத்திலும் நான் என் ஆண்டவரைச் சார்ந்து கொண்ட "மகா கிருபையே" நடத்தி வந்தது! நல்ல விசுவாச வீட்டாரைப்போல, பல வருடம் சபையில் நிலைத்து வாழ்ந்த சில குடும்பங்களில்..... திருமண நேரங்களில் விசுவாச சேதம்! சத்தியத்தின் சீர்குலைவு! உலகத்தார் போன்ற வரதட்சனை பேரம்! பெண் வீட்டார் மாப்பிளை வீட்டார் தகராறு! இவ்வாறாக திருமண நேரத்தில் சீரழிந்து போன விசுவாச வீட்டாரைக் கண்டு அதிர்ச்சி அடைந்திருக்கிறேன். மனப்பூர்வமாய் நான் கூற வேண்டுமென்றால் என் ஐந்து மக்களுக்கும் கல்யாணம் எப்படி நடந்தது என்பது எனக்கே தெரியாது! **தேவனே முன் நின்று,** அவ்வளவு அமைதலாய், அவ்வளவு சந்தோஷமாய் நிறைவேற்றி வைத்தார். உலக பேச்சுகளுக்கும், சமாதான குறைவுக்கும் கடுகளவு கூட என் ஐந்து மக்கள் திருமணத்திலும் சம்பவிக்கவில்லை! பக்தியும், எளிமையும், தெய்வ பிரசன்னத்தின் பேரானந்தமும் என் பிள்ளைகளின் திருமணம் தொடங்கி, அவர்கள் ஜீவியமெல்லாம் நிலைத்திருந்தது!

நான் ஒரு தேவ ஊழியனாய் இருந்து எவ்வளவு துன்பங்கள் சகித்தேனோ, அவ்வளவு துன்பங்கள் என் பிள்ளைகள் சந்திக்கவில்லை. ஆகிலும், பல்வேறு விதமான துன்பங்கள் அவர்களையும் தாக்கியது, ஆகிலும் 'அவை யாதொன்றிலும்' என் பிள்ளைகள் மனமடிந்து

சோர்ந்து போகாமல் **விசுவாசத்தில் நிலைத்து ஜெயித்து வாழ்ந்தார்கள்.** என் மக்களின் ஐந்து குடும்பங்களை நினைக்கும்போது, கர்த்தர் அவர்களை எவ்வளவோ கிருபையுடன் நடத்தி வந்திருக்கிறார் என்பது பிரத்தியட்சம்!

**விசேஷமான இரகசியம் என்னவென்றால்: நாம் முழுவதும் ஆண்டவர் காரியமாய் இருக்கும் போது, அவர் முழுவதும் நமது காரியமாய் இருந்து, நமக்காக எல்லாவற்றையும் செய்து முடிக்கிறார்! என்பதே அந்த இரகசியம்!**

ஒ தேவபிள்ளையே, உங்களை முற்றிலுமாய் தேவனுடைய பலிபீடத்தில் வைத்து வாழ்வது, ஓர் பேரானந்த வாழ்க்கை! அதுவும், அவர் உங்களுக்குத் தந்த ஊழிய பணியை சீரும் சிறப்புமாய் கருத்துடன் செய்து முடிப்பது.... அதைவிட, பொன்னான பாக்கியம்! தேவன் பட்சபாதம் காட்டுவரல்ல..... 'அவரே எல்லாம்' என பணி செய்த என்னை ஆசீர்வதித்து, என் குடும்பத்தை கட்டிய ஆண்டவர் உங்கள் குடும்பத்தையும் சீரும் சிறப்புமாய் கட்டுவார்!

– பரமானந்தம் ஐயர்

---

## 'சாது' உடையல்ல! என்னுள் ஒளிர்ந்த ஜீவ ஒளியே எனது சாட்சி!

**ஹ**ரிதுவார் மலையில், ஓர் சந்நியாசி தரையில் ஆணியால் அடிக்கப்பட்ட ஸ்தலத்தின் மீது படுத்திருந்தார். நான் அவரிடம் "எவ்வளவு காலத்திற்கு இந்த வேதனையில் தொடர்வீர்கள்?" எனக் கேட்டேன். அதற்கு அந்த சந்நியாசி "உங்களைப் பார்த்தாலும் ஒரு சாதுவைப் போலவே தோன்றுகிறது. நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பது ஏன் விளங்கவில்லை? இது எனக்குரிய தவம்! என்னுடைய மாம்சத்தையும் அதன் ஆசைகளையும் அழித்துக் கொண்டிருக்கிறேன். நான் இன்னமும் எனக்குள் இருக்கும் தீமையான ஆசைகளை தெளிவாய் காண்கிறேன்.

**என் ஆணிகளின் வலியை விட என்னுள் துள்ளிக் கொண்டிருக்கும் 'என் ஆசைகளே' எனக்கு அதிக வலியாய் இருக்கிறது!**

இந்த தவத்தை 18 மாதங்களாய் செய்து வருகிறேன். என் ஆசைகள் முழுவதும் என் ஈன உடம்பை விட்டு எப்போது அகலும் என தெரியவில்லை. வருடங்கள் பல ஆனாலும், என் இலக்கை அடையும் வரை இந்த தவத்தை தொடர தீர்மானித்திருக்கிறேன்" எனக்கூறினார்.

நான் சற்று திகைத்து நின்றேன். "இத்தனை மாதங்களாய் அடையாத ஒன்றை, இனி எப்போது அடைவீர்கள்? நமக்குத் தோன்றுகிற தவ வழியில், இந்த மாம்சத்தின் ஆசைகளை அழிக்க முடியுமா? மாம்சத்தின் அழிவை தேடுவதற்கு இணையாய் சர்வ வல்ல

தேவனின் ஜீவனை அல்லவோ நீங்கள் தேடி இருக்க வேண்டும்?" என நான் கூறியதை அந்த சந்நியாசி கேட்டு சிந்திக்கத் தொடங்கினார்.

மற்றொரு இடத்தில் தவம் இருந்த இன்னொரு சந்நியாசியைக் கண்டேன். ஒரு மரத்தின் கிளையில் தன் இரண்டு கால்களையும் கட்டி தலைகீழாய் தொங்கிக் கொண்டிருந்தார். சில மணி நேரங்கள் கழித்து தன் தவ நிலையிலிருந்து ஓய்வு எடுக்க, அவர் மரத்தடியில் அமர்ந்த போது, நான் அவரிடம் சென்றேன். "இப்படி ஒரு தவம் இருக்கிறீர்களே? இதன் நோக்கம் என்ன?" எனக் கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டே "நம் சிருஷ்டி கர்த்தா, நம் தாயின் வயிற்றிலிருக்கும் போதே ஒவ்வொரு குழந்தையும் தலைகீழாய் பிறக்கவே வைத்திருக்கிறார். ஆகவேதான்.....

**இந்த முழு உலகமும் 'நல்ல வாழ்க்கையை இழந்து' தலைகீழாய் வாழ்கிறார்கள். இந்த ஈன நிலையைக் கண்ட நான், சிருஷ்டி கர்த்தாவின் பார்வையில் நான் நேராய் நின்று வாழும் வரை இந்த தவம் செய்திட தீர்மானித்துள்ளேன்!" எனக் கூறினதைக் கேட்டு, திகைப்படைந்தேன்!**

அதற்கு நான் "ஐயா, இந்த உலகம் தன் சொந்த வழியில் தாறுமாறான பாவங்களால் தலைகீழாய் மாறுபட்டு வாழ்வது உண்மைதான். ஆனால் இந்த கோணலான சந்ததியில் 'நம் சொந்த முயற்சியால்' நம்மை நேராக்கி மாற்றிட முடியுமோ? இதற்கு மாறாக **நம்மை சிருஷ்டித்த தேவனிடம் திரும்பினால்** கெட்ட சிந்தைகளும், ஆசைகளும் நிறைந்த நம் ஜீவியத்தை அந்த இரட்சக பெருமானே நம்மை 'நேராய்' மாற்றுவாரல்லவோ? நீங்கள் உங்கள் சிருஷ்டி கர்த்தாவிடத்தில் வந்து சேருவதே நலம்!" எனக் கூறினேன்! அதற்கு அவர் மௌனமாய் சிந்திக்கத் தொடங்கினார்.

சந்நியாசமிருந்தோ அல்லது சாதுவாய் இருந்தோ தெய்வத்துவத்தை நாம் பெற்றுவிடலாம் என்ற எண்ணம் கொண்ட இவர்களுக்கு முன்பாக, நானும் ஒரு சாதுவாய் நின்று உரைத்த 'ஜீவ வார்த்தைகள்' அவர்களைத் தட்டி எழுப்பியதைக் கண்டேன்! 'எங்களைப் போலவே நீயும் ஒரு சாதுதான்' எனக்கூறிய அவர்கள், என்னுள் ஒளிர்ந்த இயேசுவின் ஜீவ ஒளியைக்கண்டு... **அவர்களைப் போல் அல்லாமல் 'நான் வித்தியாசமானவன்'** என காணத்துவங்கிய மாற்றத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தேன்! நெஞ்சில் பரிசுத்தம் ஒளிராமல், என்னைப் போன்ற சாது உடையும், ஓர் நீண்ட தாடியும் 'பரிசுத்தம்' என எண்ணுவதும், தங்களை 'சாது' என கூறிட முற்படுகிறவர்களை "தூயவான்" என நம்புவதும் வஞ்சகமென அறிந்துகொள்வது நலம்!

– சாது சுந்தர்சிங்

## அன்பின் கொடுமுடி!

**பெ**ந்தெகொஸ்தே அனுபவமாகிய 'பரிசுத்தாவி அபிஷேகத்தின் நோக்கம்' இன்னும் திரளான மக்கள் வாழ்வில் நிறைவேறவில்லை! ஓர் பரவச அனுபவமாகவே, பரிசுத்தாவியின் நிறைவை பெற விரும்பு கிறார்கள்! அல்லாமல், அந்த அபிஷேகம் நடத்தும் உயர்ந்த பாதையில், தன் சிலுவை எடுத்து, இயேசுவைப் பின்பற்றி, முன்னேறிச் சென்று, 'சீயோன் மலையில்' அவரோடு **அன்பின் கொடுமுடி** அடைந்தவர்கள் வெகு சிலரே என வெளி.*14:1-4* கூறுகிறது! ஆம், கற்பனையின் பொருள் அல்லது இலக்கு "அன்பே" எனவும், இந்த இலக்கை நோக்கிச் செல்லாமல், சிலர் விலகிப்போனார்கள்! என்றே பவுல் வருந்தினார்! *(1தீமோ.1:4,5).*

நாம் பெற்ற பரிசுத்தாவியின் அபிஷேகம் "பயமுள்ள ஆவி அல்ல.... **அது, பலமும்** (Power) **அன்பும்** (Love) **நிறைந்த ஆவியும்,** புதிய உடன்படிக்கையின் முக்கிய சாரமான 'தெளிந்த மனதை' அருளும் ஆவி!" எனவும் *2*தீமோத்தேயு.*1:7* கூறுகிறது. இந்த இலக்கை அடையவே "நாம் (பரிசுத்த ஆவியினால்) **அனல் மூட்டி** எழுப்பப்பட வேண்டும்!" என **6** - ம் வசனத்தில் கூறினார்! நாம் 'தெய்வ அன்பில்' வேரூன்றி, இயேசு முன்னோடியாய் சிறந்த 'கொடுமுடியை' நாமும் சென்றடைய, ஆவியின் பெலன் எவ்வளவு அவசியமாயிருக்கிறது!

ஏனெனில், ஆவியானவர் நடத்திச் செல்லும் எந்த கடின சூழ்நிலையிலும், அவரின் அன்பை சந்தேகிக்காதவர்கள் மாத்திரமே ரோமர்.8:28-ம் வசனத்திற்கு சொந்தமான வர்களாய் "தேவனிடத்தில் அன்புகூருகிற 'எங்களுக்கு' சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்!"என முழங்கும் பாக்கியம் பெறுகிறார்கள்!

இவ்வாறு 'கடின சூழ்நிலை மத்தியில்' ஆவியின் பெலன் கொண்டு தேவனை நேசிப்பவர்களிடத்தில், சூழ்நிலையைக் குறித்த பயம் ஏற்படுவதில்லை! ஆம், "அன்பிலே பயமில்லை.... பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல!" எனக்கூறும் வசனத்தைப் பாருங்கள் *(1யோவான்.4:18).*

இயேசுவோடு துவங்கிய தன் ஜீவிய ஆரம்பம் முதலே, இயேசுவை தனிப்பட்ட விதத்தில் அதிகமாய் அன்புகூர்ந்தவனே இந்த பேதுரு! ஆகவேதான், இன்று ராத்திரியில் "நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய்!" என இயேசு கூறியவுடன்..... அதிகமாய் தன் மனதில் சலசலப்படைந்து "நான் செத்தாலும் உம்மை மறுதலிக்க மாட்டேன்" என அவன் கூறியதெல்லாம், அவர் மீது கொண்ட ஓர் அன்பின் வைராக்கியமேயாகும்! *(மத்.26:33,34).* ஆனால், இயேசு சொன்ன படியே, ஒரு வேலைக்கார பெண் முன்பாக மற்றும் இருவருக்கு

முன்பாக மறுதலித்து....சேவல் கூவியவுடன்..... இயேசுவை அன்புகூர்ந்த இந்த சீஷன் உள்ளம் உடைந்து, பிரதான ஆசாரியன் வீட்டிற்கு இழுத்துச் செல்லப்பட்ட இயேசு தன்னை நோக்கிப் பார்த்ததைக் கண்டு மனம் கசந்து அழுதான்! (லூக்கா.22:55-62).

சேவல் கூவிய 'அந்த ஒரு 15 - நிமிட' கடின நிகழ்ச்சிக்குப் பிறகு..... உயிர்த்தெழுந்த ஆண்டவர் அவனைச் சந்தித்த நிகழ்ச்சி ஓர் அன்பின் பரவசமேயாகும்! "நீ என்னை ஏன் மறுதலித்தாய்?" என அவர் பேதுருவை கேட்கவில்லை. அதற்கு பதிலாக, அவன் தன் மீது கொண்ட அன்பின் விசுவாசத்தில், சந்தேகமும் பயமும் கொண்ட சேதம் ஏற்பட்டதோ? என அறியவே இயேசு ஆசைப்பட்டார்!

**தனக்கு ஏற்பட்ட கொடிய சூழ்நிலையில் சந்தித்த, வேலைக்காரப் பெண்! பிரதான ஆசாரியரை சார்ந்த இருவர்! அந்த சேவல்! இன்னும், தன்னைப் புடைக்கும்படி இயேசுவே அனுமதித்த பிசாசு.... ஆகிய இந்நிலையில் "என் அன்பில் உனக்கு சந்தேகம் ஏற்பட்டு விட்டதோ? நீ இன்னமும் என்னை நேசிக்கிறாயா?....." என்றே உள்ளம் பதைத்து கேட்டார்!**

சேவல் கூவிய மூன்று முறை மறுதலித்த பேதுரு, இப்போது மூன்று முறை "ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன்! என்பதை நீரே அறிவீர்" என கெம்பீரித்தான்!

இயேசு சென்ற கொல்கொதா கொடுமுடி, தெய்வ அன்பின் கொடுமுடியே ஆகும்! கெத்சமனே தொடங்கி, கொல்கொதா உச்சி வரை அவர் சந்தித்த துரோகம், விரோதம், கொடிய பாடுகள் அனைத்திற்கும் "பிதாவே, பிதாவே....." என உரைத்த அவரது முறுமுறுப்பற்ற சாந்த மொழிகள்.... சிலுவையில் அவர் நொறுங்கி கண்டடைந்த "தெய்வ அன்பின்" பெருவெள்ளமேயாகும்! அந்த கொல்கொதா கொடு முடியில் தன் பிதாவை சற்றேனும் சந்தேகிக்காது நேசித்த நேசமும், பிதா தனக்கு சொந்தமாய் தந்தவர்களையும், முழு உலகத்தை நேசித்த நேசமும்..... அந்த கொல்கொதா மேட்டை "**அன்பின் கொடுமுடியாய்**" மாற்றியது! சிலுவையில் அவர் சிறந்த அன்பின் வெற்றி, கொல்கொதா மேட்டின் நண்பகலை இருளடையச் செய்து, பூமியை அந்தகார மடையச் செய்தது..... ஆலயத்தின் திரைச்சீலையும் இரண்டாய் கிழிந்து போனது!! ஆம், சகலமும் மாறிடும், ஆகிலும் தெய்வ அன்பு ஒன்றே ஒழியாது! என, பூமி நடுங்கி சாட்சியுரைத்தது! இந்த தெய்வ அன்பின் கொடுமுடி ஏறிட 'தன் சிலுவை' சுமந்து வருவோர் யாவரும் பாக்கியவான்கள்.... இவர்களையே "நீ பேதுரு, கற்பாறை!" என மகிழ்ந்து, சீயோன் கொடுமுடி பயணம் செல்பவர்களை வைத்து, இயேசு தன் சபையை கட்டுகிறார்!!

– T.ரத்தினகுமார்

அந்தியோகியா சபை,

# ரோமானஸ்,

## சபையை சாட்சியாய் நிறுத்தி, உயிர் நீத்த போதகர்!



**(AD 285)**

ரோம போர்த்தலைவன், அஸ்க்லிப்பியாடஸ் முன்பாக அந்தியோகியாவின் ரோமானஸ் போதகர் கைதியாக கொண்டு வரப்பட்டார். இந்தப் போர்த்தலைவனுக்கு கொடுக்கப்பட்ட பணி என்னவென்றால் "கிறிஸ்தவ விசுவாசிகளை தேடிப் பிடித்து, சித்திரவதைச் செய்து, அவர்களின் விசுவாசத்தை மறுதலிக்கச் செய்ய வேண்டும்! அல்லது, அவர்களை கொலை செய்ய வேண்டும்" என்பதேயாகும்.

ரோமானஸ், சபையில் ஆராதனை நடத்தி கொண்டிருக்கும்போது, அஸ்க்லிப்பியாடஸின் போர் வீரர்கள் சபைக்குள் நுழைந்தார்கள். பிரசங்க மேடையில் தைரியமாய் நின்று கொண்டிருந்த ரோமானஸ் "தேவ ஜனமே, ஓநாய்கள் மந்தையை பீறிப்போட வந்து விட்டன! என் சகோதரர்களே பயப்படாதிருங்கள்! விசுவாசத்தில் நிலைத்திருங்கள்!" என திடப்படுத்தினார். போதகரின் தைரியத்தோடு, வயது முதிர்ந்து ஆண்கள் பெண்கள், இளைஞர்கள், சிறு பிள்ளைகள் கை கோர்த்து எழுந்து நின்றனர். ஆத்திரமுடன் ரோமானஸை கைது செய்த வீரர்கள், போர்த் தலைவனின் ஆணைப்படி அவரை சாட்டையால் அடித்தார்கள். அந்த நேரத்தில் ரோமானஸ், ஓர் கீர்த்தனைப் பாடலை உரத்த சத்தமாய் பாடினார். கிறிஸ்துவைப் புகழ்ந்த பாடலால் எரிச்சலடைந்த போர் தளபதி அவரது விலா எலும்புகளைக் கிழித்து, எலும்புகள் வெள்ளையாய் தோன்றும்படிச் செய்தான். அப்போதும் பாடிய ரோமானஸ் பற்களை உடைக்கும்படி ஆணையிட்டான்! பின்பு, ஆத்திரமுடன் "நேற்று வந்த உன் தெய்வம்! அந்த கிறிஸ்து சிலுவையில் கொல்லப்பட்டு விட்டார்! ஆனால் எங்கள் கிரேக்க தேவதைகள் ஆதி முதற்கொண்டு உள்ள தெய்வங்கள்! இது உனக்குப் புரிய வேண்டாமா? மரித்த உன் தெய்வத்திற்காக உயிர் தருவதா?" எனக்கேட்டான்.

அச்சமயம் கூட்டத்திலிருந்த தன் சபை மக்களில் ஒரு சிறு பிள்ளையை கூப்பிடும்படி ரோமானஸ் கேட்டுக்கொண்டார். வரவழைக்கப்பட்ட அந்த பிள்ளையிடம், சீரழிந்த கோலத்தில் நின்று கொண்டிருந்த ரோமானஸ் "என் அருமை விசுவாச பிள்ளையே ஒரே கிறிஸ்தும் ஒரே பிதாவுமாய் இருப்பவரை நாம் வணங்குவதோ? அல்லது கிரேக்க ஏராளமான தேவதைகளை வணங்குவதோ?" என கேட்டார். அதற்கு அந்த சிறு பிள்ளை "போதகர் ஐயா, தேவனும் கிறிஸ்துவும் ஒருவரே! பல தேவதைகளை நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம்!" எனக் கூறியதும் அந்தப் போர்த்தலைவன் அந்தப் பிள்ளையை மூர்க்கத்தனமாய் வாரினால் அடித்து, அவள் தலையை வாளால் வெட்டி வீசினான்! அவளின் விசுவாச மரணத்திற்கு ரோமானஸின் சபையார், கண்ணீர் மல்க எழுந்து நின்று, பிள்ளையின் விசுவாசத்திற்கு கனம் செய்த அதே வேளையில், போதகர் ரோமானசும் சிரச்சேதம் செய்யப்பட்டார்!

*- கர்த்தரின் தீபங்கள்*

## ஓ வாலிபனே, உன் ஆத்துமாவின் கரிசனை பெரிதன்றோ?

மிலான் பட்டணத்தில் உள்ள புகழ்பெற்ற அழகான தேவாலயத்தின் முகப்பில் மூன்று நுழை வாயில்கள் உள்ளன. அதின் முதல் நுழை வாயிலில், ஒரு அழகான ரோஜா மலர் வளையம் சித்திரமாகச் செதுக்கப்பட்டு அதின் கீழாக "மனதிற்கு இன்பமோ? அது, ஒரு கண நேரம் மாத்திரமே!" என்று எழுதப்பட்டிருந்தது. இரண்டாவது நுழைவாயிலில், ஒரு சிலுவைச் சின்னம் செதுக்கப்பட்டு அதின் கீழாக "இவ்வுலகத்து பாடுகள் எல்லாம், சொற்ப காலமே!" என்று எழுதப்பட்டிருந்தது. தேவாலயத்துக்குள் நுழையும் பிரதான நுழை வாயிலின் மேலே "என்றும் நிலைத்திருக்கும் நித்தியமே நமது பிரதானம்!" என்று பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருந்தது.

"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம், ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" (மத்.10:28) என்று இரட்சகர் இயேசு தமது சீடர்களுக்குப் போதித்தார். மரணமானது ஒரு விசுவாசிக்கு நேரிடக்கூடிய ஒரு சம்பவம் மாத்திரமேதான். காரியம் இப்படியாய் இருக்க, தன் ஆத்துமாவைக் குறித்து அக்கறைப்படவோ இன்று அதிகம் பேர் இல்லை!

அல்லது, "உங்கள் ஆத்துமா, கவனம்!" என எச்சரிக்கும் ஆத்தும பாரம் கொண்ட உண்மை ஊழியர்களும் மங்கிப் போனார்கள்! நீயோ வாலிபனே, உன் ஆத்துமா விலையேறப்பட்டது என்பதை அறிவாயாக! உலக மோகம் உன்னை ஆண்டுகொண்டு, உன் நித்திய ஆத்துமாவை, இந்த உலகின் காலில் நசுங்க வைப்பது நியாயமா?..... இன்றே மனந்திரும்பி, உன் ஆத்துமா, இரட்சகர் இயேசுவால் இரட்சிக்கப்பட உன் உள்ளத்தை அவருக்குத் தருவாயாக!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.